ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1872/32 - 2014 ජූලි මස 25 වැනි සිකුරාදා - 2014.07.25

*1872/32 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்டம்*

*2014, யூலை 14 ஆந் திகதிய 1871/17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மேற்கூறப்பட்ட தலையங்கத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*செயலாளர்,*
*அஞ்சல் சேவைகள் அமைச்சு.*

*2014, யூலை 25.*

### *அஞ்சல் அலுவலக கட்டளைச் சட்டம்*

*(190 ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலக சட்டத்தின் 6, 10, 12, 19, 21, 25, 27, 43, 44, 59 மற்றும் 68 எனும் பிரிவுகளின் கீழ் அஞ்சல் சேவைகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் இணக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள விதிகள்.*

*ஜீவன் குமாரணதுங்க,*
*அஞ்சல் சேவைகள் அமைச்சர்.*

*கொழும்பு,*
*2014, யூலை 25.*

### *விதிகள்*

*1934 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதிய 8093 ஆம் இலக்க வர்த்தமானியில் மேலதிகமாக வெளியிடப்பட்ட மற்றும் தேவைக்கேற்ப விதியில் சில திருத்தங்கள் 1934 ஆம் ஆண்டின் உள்நாட்டு அஞ்சல் அலுவலக விதியில் 2007.04.25 ஆந் திகதிய 1494/10 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்டு மேலும் 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் பின்வருமாறு அஞ்சல் அலுவலக விதி இதன்மூலம் திருத்தப்படும்.*

*1. 12 ஆவது விதியில் (1) பந்தியில் 30 கிராம் என்பதற்கு பதிலாக 20 கிராம் என்றும் 5.00 ரூபா என்ற இலக்கத்துக்குப் பதிலாக 10.00 ரூபா என்ற இலக்கத்தை பதிலிடுவதன் மூலம்.*

*2. 21 ஆவது விதியில் 30 கிராம் என்பதற்குப் பதிலாக 20 கிராம் என்றும் 4.50 ரூபாய் என்ற இலக்கத்துக்குப் பதிலாக 7.00 ரூபா என்ற இலக்கத்தை பதிலிடுவதன் மூலம்.*

*3. 19 ஆவது விதியில் 4.00 ரூபா என்ற இலக்கத்துக்குப் பதிலாக 8.00 ரூபா என்ற இலக்கத்தை பதிலிடுவதன் மூலம்.*

*4. 27 ஆவது விதியில் (2) ஆம் பந்தியில் ஒவ்வொரு 500 கிராம் என்பதற்குப் பதிலாக முதல் 250 கிராம் என்ற இலக்கமும் 50.00 ரூபா என்பதற்குப் பதிலாக 90.00 ரூபா என்ற ஒழுங்கு முறையில் அடுத்த 250 கிராம் அல்லது அதன் பகுதிக்கு 20.00 ரூபா படியும் 500 கிராமிலிருந்து 1,500 கிராம் வரை அதிகரிக்கும் 500 கிராம் அல்லது அதன் பகுதிக்கு 20.00 ரூபாய் படியும் 1,500 கிராமிலிருந்து 3,000 கிராம் வரை அதிகரிக்கும் 500 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் 50.00 ரூபா படியும் 3,000 கிராமிலிருந்து 4,000 கிராம் வரை ரூபாய் 50.00 படியும் 4,000 கிராமிலிருந்து அதிகரிக்கும் 1,000 கிராம் அல்லது அதன் பகுதிக்கு 100.00 ரூபாபடியும் மாதிரியாகக் கொள்வதற்கும் இதற்கு மேலதிகமாக 1955 ஆம் ஆண்டில் 30 ஆம் இலக்க திருத்த அஞ்சல் அலுவலக சட்டத்தின் 8 ஆவது பிரிவில் அஞ்சல் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சருக்குள்ள அதிகாரத்துக்கு அமைய உள்நாட்டு பொதிகள் கட்டணத்துக்கு 20.00 ரூபா நிலையான கட்டணமாகச் சேர்ப்பதை இதன் பின்னர் இரத்துச் செய்வதென்றும்.*

*5. 25 ஆவது விதியில் (1) ஆவது பந்தியில் ஒவ்வொரு 60 கிராம் என்பதற்குப் பதிலாக முதல் 60 கிராம் என்ற இலக்கமும் 8.00 ரூபாய் என்பதற்குப் பதிலாக 8.00 ரூபாவும் பின்னர் இரண்டாவது 60 கிராமுக்காக 4.00 ரூபாவும் அடுத்து 120 கிராமோ அல்லது அதன் பகுதிக்கு 12.00 ரூபா படியும் பதிலிடுவதன் மூலம்.*

*6. 43 ஆவது விதியில் (2) ஆம் பந்தியில் ஐந்து ரூபா என்ற சொல்லுக்குப் பதிலாக பத்து ரூபா என்ற சொல்லை பதிலிடுவதன் மூலம்.*

*7. 59 ஆவது விதியில் (2) ஆம் பந்தியில் 2,500 ரூபா என்ற இலக்கத்துக்குப் பதிலாக 5,000.00 என்ற இலக்கத்தை பதிலிடுவதன் மூலம்.*

*8. 1494/10 ஆம் இலக்க, 2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் 25 ஆந் திகதி புதன்கிழமை அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிரிவுக்காக 93 ஆவது பந்தி புதிதாக உள்வாங்கப்பட்டும் வியாபார அஞ்சலுக்காக 30 கிராம் அல்லது அதன் பகுதிக்கு 15.00 ரூபா என்னும் சொற்களுக்குப் பதிலாக வியாபார அஞ்சலுக்காக.*

*முதல் 20 கிராமுக்காக ரூபா 15.00 வும்,*
*அடுத்த 100 கிராம் வரை அதிகரிக்கும் ஒவ்வொரு 20 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் ரூபா 10.00 படியும்,*
*100 கிராமிலிருந்து 250 கிராம் வரை அதிகரிக்கும் ஒவ்வொரு 50 கிராமுக்கும் அதன் பதிக்கும் ரூபா 5.00 படியும்,*
*250 கிராமிலிருந்து 1,000 கிராம் வரை அதிகரிக்கும் 50 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் ரூபா 30.00 படியும்,*
*1,000 கிராமிலிருந்து 2,000 கிராம் வரை அதிகரிக்கும் 250 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் ரூபா 50.00 படியும்,*

*மற்றும் கொழும்பு நகர ஒப்படைப்பு வலயம் 15 க்குள்ளும் விநியோகத்துக்காக மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தில் பாரம் எடுக்கப்படும் கடிதங்கள் ( ஆகக் குறைந்தது 25,000) க்காக 20 கிராம் வரை (ஒரு கடிதத்துக்கு) 12.00 ரூபா வரை எனும் சொற்களை உள்வாங்குவதும்.*

*9. 1494/10 ஆம் இலக்க, 2007, ஏப்பிறல் 25 ஆந் திகதி புதன்கிழமை அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள விதிக்காக 94 ஆவது பந்தி புதிதாக உள்ளடக்கப்பட்டு திறந்த வியாபார கடிதத்துக்காக 30 கிராம் அல்லது அதன் பகுதிக்கு 12.00 ரூபா என்ற ஷரத்துக்குப் பதிலாக அச்சடிக்கப்பட்ட பொருட்கள் திறந்த வியாபார கடிதத்துக்காக (ஆகக்கூடிய நிறை 2 கிலோ வரை).*

*முதல் 20 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் 12 ரூபாவும்,*
*40 கிராம் வரை அதிகரிக்கும 20 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் 8.00 ரூபாவும்,*
*40 கிராமிலிருந்து 100 கிராம் வரை அதிகரிக்கும் ஒவ்வொரு 20 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் 5.00 ரூபா படியும்,*
*100 கிராமிலிருந்து 250கிராம் வரை அதிகரிக்கும் ஒவ்வொரு 30 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் 5.00 ரூபாவும்,*
*250 கிராமிலிருந்து 500 கிராம் வரை அதிகரிக்கும் ஒவ்வொரு 50 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் 5.00 ரூபா படியும்,*
*500 கிராமலிருந்து 1,000 கிராம் வரை அதிகரிக்கும் ஒவ்வொரு 100 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் 5.00 ரூபா படியும்,*
*1,000 கிராமிலிருந்து அதிகரிக்கும் ஒவ்வொரு 500 கிராமுக்கும் அதன் பகுதிக்கும் ரூபாய் 5.00 படியும் என்ற சொற்களை உள்வாங்குவதற்கும்.*

யாப்பு விதிக்காக 95 ஆவது பந்தி புதிதாக உள்வாங்கி அமைச்சரவைப் பத்திரம் இலக்கம் 12/0823/525/005 க்கமைய அஞ்சல் திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய சேவைகளுக்காக பின்வரும் பந்திக்காக சொற்களை உள்வாங்குவதற்கும்:-

95- I லொஜி போஸ்ட் பார்சல் சேவை ஊடாக அனுப்பக் கூடிய ஆகக்கூடிய நிறை 40 கிலோவும் அதற்காக அறவிடப்படும் அஞ்சல் கட்டணம் உள்நாட்டு சாதாரண அஞ்சல் கட்டணத்துக்கு மேலதிகமாக அந்தக் கட்டணத்தில் 50% அளவு சேர்த்துக் கொள்வதற்கும் 20 கிலோவிலிருந்து அதிகரிக்கும் ஒவ்வொரு கிலோவுக்கும் அதன் பகுதிக்கும் 150.00 ரூபா படியும் என்ற சொல்லை உள்வாங்குவதற்கும்.

95- II விளம்பர அஞ்சல் கட்டணத்தின் கீழ் ஆகக்கூடிய நிறை முதல் 20 கிராம் கொண்ட துண்டுப் பிரசுரம் 1,000 க்காக 6,000.00 ரூபாவும் அதிகரிக்கும் துண்டுப் பிரசுரம் 1,000 க்கோ அதன் பகுதிக்கோ 5,000.00 ரூபாய் படியும் நிறை 20 கிராமை விட அதிகரிக்கும் மற்றும் 40 கிராமோ அல்லது அதற்கு குறைவான முதல் 1,000 துண்டுப் பிரசுரத்துக்கு 7,000.00 ரூபாவும் அதிகரிக்கும் 1,000 துண்டுப் பிரசுரத்துக்கும் அதன் பகுதிக்கும் 6,000.00 ரூபாவும் நிறை 40 கிராமோ அதைவிட அதிகரிக்கும் மற்றும் 60 கிராமுக்கோ அல்லது அதைவிட குறைவான முதல் துண்டுப் பிரசுரம் 1,000 க்காக 8,000.00 ரூபாவும் அதிகரிக்கும் 1,000 துண்டுப் பிரசுரத்துக்கும் அதன் பகுதிக்கும் 7,000.00 ரூபாவும் 60 கிராமுக்கோ அதைவிட அதிகரிக்கும் மற்றும் 80 கிராமுக்கோ அல்லது அதைவிட குறைவான முதல் 1,000 துண்டுப் பிரசுரங்களுக்கு 9,000.00 ரூபாவும் அதிகரிக்கும் 1,000 துண்டுப் பிரசுரங்களுக்கோ அல்லது அதன் பகுதிக்கோ 8,000.00 ரூபாவும் 80 கிராமுக்கோ அதைவிட அதிகரிக்கும் மற்றும் 100 கிராமுக்கோ அதைவிட குறைவான முதல் 1,000 துண்டுப் பிரசுரங்களுக்கு 10,000.00 ரூபாவும் அதிகரிக்கும் 1,000 துண்டுப் பிரசுரங்களுக்கோ அல்லது அதன் பகுதிக்கோ 9,000.00 ரூபாவும் என்ற சொற்களை உள்வாங்குவதற்கும்.

95- III விபரக்கொத்து மற்றும் அறிக்கை ஒப்படைப்பு அஞ்சல் கட்டணமாக முதல் 500 கிராம் வரை செயற்பாட்டுச் செலவுகள் அடங்கலாக 75.00 ரூபாவும் 500 கிராமிலிருந்து 1,000 கிராம் வரை செயற்பாட்டுச் செலவுகள் அடங்கலாக 85.00 ரூபாவும் 1,000 கிராமிலிருந்து 1,500 கிராம் வரை செயற்பாட்டுச் செலவுகள் அடங்கலாக 90.00 ரூபாவும் 1,500 கிராமிலிருந்து 2,000 கிராம் வரை செயற்பாட்டுச் செலவுகள் அடங்கலாக 100.00 ரூபாவும் என்ற சொற்களை உள்வாங்குவதற்கும். (செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 10.00 முதல் ரூபா 15.00 வரை)

95- IV உள்நாட்டு அதிவேக கூரியர் சேவையான ஸ்பீட் போஸ்ட் கூரியர் அஞ்சலில் அனுப்பக்கூடிய ஆகக்கூடிய நிறை 10 கிலோ ஆகும். ஸ்பீட் போஸ்ட் கூரியர் சேவைக்காக கொழும்பு ஒப்படைப்பு வலயத்துக்குள் அல்லது தமது ஒப்படைப்பு வலயத்துக்குள் பாரம் எடுத்து அந்தப் பகுதிக்கான ஒப்படைப்புக்காக அஞ்சல் கட்டணம் வியாபார அஞ்சல் கட்டணத்துக்கு மேலதிகமாக 35.00 ரூபாவும் தமது ஒப்படைப்பு வலயத்துக்கு வெளியில் சகல பிரதேசங்களுக்கான ஒப்படைப்புக்காக வியாபார அஞ்சல் கட்டணத்துக்கு மேலதிகமாக 50.00 ரூபாவும் வியாபார கடிதத்தின் ஆகக்கூடிய நிறை 2 கிலோவிலிருந்து அதிகரிக்கும் ஒவ்வொரு 1 கிலோவுக்கும் அதன் பகுதிக்கும் 100.00 ரூபாபடியும்.

95- V (6 ஆவது விதியின் (ii) பந்தியின் 20.00 ரூபாவும் என்ற இலக்கத்துக்குப் பதிலாக) அஞ்சல் பொருட்கள் அல்லது பலவற்றுக்காக அஞ்சலிடும் சான்றிதழ் வழங்கும் கட்டணம் ஒரு பொருளுக்காக ரூபா 40.00 வும் பொருட்கள் 02 இலிருந்து 100 வரை ரூபா 50.00 வும், பொருட்கள் 101 இலிருந்து 500 வரை ரூபா 60.00 வும், ரூபா 500 க்கு அதிகமானதற்கு 100.00 ரூபா என்ற இலக்கத்தை மாதிரிக்காகக் கொள்வது.

95- VI (44 ஆவது விதியின் (i) (ஆ) பந்தியின் 35.00 ரூபா என்ற இலக்கத்துக்குப் பதிலாக) சென்றடையும் அலுவலகத்தில் அல்லது இடைநிலை அலுவலகத்தில் தேடும் கட்டணம் 25.00 ரூபா என்ற இலக்கத்தை மாதிரியாகக் கொள்வதன் மூலம்.

95- VII (68 ஆவது விதியின் 25.00 ரூபா என்ற இலக்கத்துக்கு பதிலாக) பதிவுக் கடிதங்கள் பற்றுச் சீட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிக்கான கட்டணம் 50.00 ரூபா என்ற இலக்கம் மாதிரியாகக் கொள்வதன் மூலம்.

95- VIII அஞ்சல் அறிமுக அட்டை ஒரே நாள் சேவைக்காக 100.00 ரூபாவும்.

95- IX அஞ்சல் பையின் பெறுமதி (பெரிது) மி. மீ 970X 510 க்காக 7,500.00 ரூபாவும் (சிறிது) மி. மீ 760X 430 க்காக 5,000 ரூபாவும் மேலதிக திறப்புக்காக 500.00 ரூபாவும்.

95- X தொகை அஞ்சல் வசதி (M சேவைக்காக) முதல் முறை பதிவுக் கட்டணம் 5,000.00 ரூபாவும் வருடாந்தம் புதுப்பிக்கும் கட்டணம் 3,000.00 ரூபாவும்.

8- 410

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.